1972 ஆகஸ்ட் 18]

(இ) இப்பதவிக்கு அடுத்து அடுத்து நியமிக்கப்பட்ட மருத்துவ அதிகாரிகள் பணியில் சேராமையே காரணம்.

Professor of Obstetrics

* 43 *Q*.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that a post of Professor of Obstetrics is vacant at Thanjavur Medical College ;

(*b*) if so, the period for which it is vacant; and

(*c*) the reason for not filling the same?

மகப்பேறியல் பேராசிரியர் பதவி.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் மகப்பேறியல் பேராசிரியர் பதவி ஒன்று காலியாகவுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், எவ்வளவு காலமாக அப்பதவி காலியாக வுள்ளது ?

(உ) அப்பதவி நிரப்பப்படாமல் உள்ளதற்கான காரணம் என்ன ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இப்போது இல்லை.

(இ) இப்பதவி 21—1—70 முதல் 18—4—72 வரை காலியாக இருந்தது.

(உ) இப்பதவியில் அடுத்து, அடுத்து நியமிக்கப்பட்ட மருத்துவ அதிகாரிகள் பணியில் சேராமையே காரணம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இந்த மாதிரி விசேஷத் தகுதி உடையவர்கள் நீண்ட நாட்கள் லீவில் செல்கின்றபோது, அந்தப் பதவிக்குத் தகுதியானவர்கள், அந்தப் பணியினைச் செய்யக் கூடியவர்கள் வைத்திய இலாகாவில் இல்லை

[1972 ஆகஸ்ட் 18

என்ற காரணத்தால் நியமிக்கப்படவில்லையா ? என்ன காரணத்தால் அந்தப் பதவி காலியாக வைக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது ஜைனகாலஜி—ஆப்ஸ்டட்ரிக்ஸ் பேராசிரியர்களைக் குறித்த கேள்வி. அங்கே இருந்தவர் திருநெல்வேலிக் கல்லூரிக்கு மாற்றப்பட்டார். அதற்கு பதிலாக ஒரு அம்மையார் நியமிக்கப் பட்டார். அவர் போவதற்கு வசதியில்லையென்று தெரிவித்து விடுமுறையில் சென்றார். இன்னொரு அம்மையார் . . பெயரைச் சொல்வது சரியல்ல . . . நியமிக்கப்பட்டபோது அவரும் போக வசதியில்லையென்று விடுமுறையில் சென்றார். இப்படியாக 5, 6 பேர் நியமிக்கப்பட்டார்கள் ; எண்ணிக்கையில் வேற்றுமை இருக்கலாம். ஒவ்வொருவருக்கும் ஒரு உரிமை இருக்கிறது. ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டு நியமிக்கப்படுகிறபோது, அந்த உரிமையைப் பயன்படுத்தி விடுமுறை பெற்று விடுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் இந்நிலை ஏற்பட்டது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, are any facilities lacking in the Gynaecology and Obstetrics Department of the Thanjavur Medical College that all Obstetricians and Gynaecologists refused to join the post or is it for other reasons?

THE HON. THIRU K. ANBAZHAGAN : It is not because of lack of any facilities in the Institution in Thanjavur but because of the lack of co-operative spirit in the medical people.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, ஒரு பேராசிரியரை மாற்றும்போது, வேறு ஒரு பேராசிரியரை அந்த இடத்திற்கு மாற்றிப் போட்டு, அவர் வந்து சேராவிட்டால் அதற்கு பதிலாக ' சப்ஸ்டிடியூட்டாக ' பணி செய்ய அங்கேயே நபர்கள் இருந்தால், போடக்கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே. பேராசிரியர் பதவி, அதற்கு அடுத்து ரீடர் பதவி, அதற்கு அடுத்து விரிவுரையாளர் பதவி, அதற்கு அடுத்து டியூட்டர் பதவி என்ற நிலைமை இருக்கிறது. தலைமை இடத்திற்குப் பேராசிரியர் ஒருவரைத்தான் போட வேண்டும். அந்த முறையில் அந்தப் பதவிக்குத் தகுதி உடையவர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

1972 ஆகஸ்ட் 18]

Thiru A. R. DAMODARAN : Most of the Professors who are posted—from the names that were read out—appear to be ladies. Were any men posted to this particular Department?

The Hon. Thiru K. ANBAZHAGAN : This is more or less a speciality which is more intended for ladies, except a few like Dr. A. L. Mudaliar and one or two other eminent people.

Separate cadre for Medical Education Staff.

*44 Q.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to have separate cadre for those who are in the service of Medical Education;

(b) if so, the features of the scheme; and

(c) when the scheme is proposed to be implemented?

மருத்துவக் கல்வித் துறையின் பணியாளர்களுக்கு தனிப் பிரிவு

திரு. எ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருத்துவக் கல்வித் துறையில் பணிபுரிபவர்களுக்காக தனி பணிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் விவரக் கூறு யாது?

(உ) அத்திட்டம் எப்போது செயல்படுத்தப்பட திட்டமிடப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

Asthma

*45 Q.—Thiru M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any "Asthma" Research Centre is functioning in this State; and

(b) if so, the details thereof?